செய்திவெளியீடு நாள் : **21.11.2025**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 24.11.2025 அன்று திறக்கப்படவுள்ள **வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தின் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

****

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 24.11.2025 அன்று வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் திறக்கப்படவுள்ளதால் நேற்று (21.11.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நிகழ்ச்சி முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் சாமுவேல், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் திரு.பி.கே.மூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர் திரு.டி எஸ்பி.ராஜகோபால், சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜன்பாபு, காவல் உதவி ஆணையர் திரு.பிராங்கிளின் ரூபன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™